<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 17/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.3 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தினேஷ்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராமசாமி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 04.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் பாலப்பம்பட்டி போல்டர் பட்டியில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 07.02. 2021 ம் தேதியில் பாலப்பம்பட்டி போளார ப்பட்டி ரோட்டில் விபத்து நடந்த இருந்தது. விபத்து நடந்த பகுதிக்கு மேபுறம் எங்கள் தோட்டம் இருந்தது. மறுநாள் போலிசார் அங்கு வந்து விபத்துநடந்த இடத்தை வரைபடமாக வரைந்து மேபுறமாக எங்கள் தோட்டம் உள்ளது என்று கூறி அதற்கு ஆதரவாக சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் விவரங்களை தெரிந்து கொண்டு நானும் செல்லமுத்து என்பவரும் கையொப்பம் போடடோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1 வது கையெழுத்து என்னுடையது தான் . பார்வை மகசர் அசா.ஆ.2 என குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. போலிசார் கையெழுத்து போட்ட ஆவணத்தில் உள்ள விவரம் தெரியாது என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். என்ன விவரம் இருந்தது என்றால் 07.02 ம் தேதி 4.30 மணிக்கு விபத்து நடந்தது என்று விவரம் இருந்தது. உங்களுக்கு விபத்து

பற்றி நேரடியாக தெரியாது என்றால் தெரியாது. விபத்து எப்போது ஏற்பட்டதுஎன்று தெரியாது என்றால் சரிதான். விபத்து பற்றி தெரியா என்றாலும் விபத்து நடந்த போது நீங்கள் அங்கு இல்லை என்றாலும் போலிசார் கேட்டு கொண்டதற்கு இணங்க கையெழுத்து போட்டிர்கள் என்றால் சரிதான். போலிசார் உங்கள் முன்னலையில் படம் வரைந்ததார் என்றால் சரிதான். வரைபடத்தில் உள்ள விவரம் பற்றி தெரியாது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு உங்கள் தோட்டததிற்கும் உள்ள துூரம் என்றால் சம்பவ நடந்த இடத்திற்கு மேபுறம் எனது தோட்டம் உள்ளது.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala, B.Com., B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.